www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Com

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12
வணிகவியல்
பிரிவு - I

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. 20×1=20

1) நிரல் I நிரல் II உடன் பொருத்துக.

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| 1) மேலாண்மை | - i) | ஹென்றி ஃபோயல் |
| 2) நிர்வாகம் | - ii) | வணிக முடிவுகளை நிறைவேற்றல் |
| 3) நவீன மேலாண்மை | - iii) | வணிக முடிவெடுத்தல் |
| 4) அறிவியல் பூர்வ மேலாண்மை | - iv) | F.W.டேலர் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | ii | iii | i | iv |
| ஆ) | i | iv | ii | iii |
| இ) | iii | i | iv | ii |
| ஈ) | iv | ii | iii | i |

2) தவறான இணையைக் கண்டறிக.
அ) தலால் தெரு - பம்பாய் பங்குச் சந்தை
ஆ) லம்பார்டு தெரு - இலண்டன் பங்குச் சந்தை
இ) அண்ணா சாலை - தமிழ்நாடு பங்குச்சந்தை
ஈ) வால் தெரு - நியுயார்க் பங்குச் சந்தை

3) செபியின் தலைமையகம் ............. ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) டில்லி

4) 'முதலில் வேலை, அடுத்தது மனிதர்' என்பது ............ கோட்பாடு
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

5) ............ ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

6) கீழ்க்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

7) நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் .......... நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அனுசரிக்கப்பட்டுள்ளது.
அ) ஆகஸ்டு 15 ஆ) ஏப்ரல் 15 இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15

8) ............. என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

9) இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள் ............ மற்றும் ........... ஆகும்.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) உட்புறம் ஈ) வெளிப்புறம்

10) புதிய பொருளாதாரக் கொள்கை ............ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

11) சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளில் உள்ளடங்கியது?
அ) சரக்கிருப்பு ஆ) வர வேண்டிய பங்காதாயம்
இ) பயிர் ஈ) தண்ணீர்

12) மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எத்தனை பேர்?
அ) 2 ஆ) 6 இ) 3 ஈ) 4

13) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங்கி ஆ) புதுமை படைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

14) சேவை புரியாத தொழில் முனைவோரைக் கண்டுபிடி
அ) உணவு விடுதி நடத்துபவர் ஆ) வங்கித் தொழில் செய்பவர்
இ) வான்வழி போக்குவரத்து செயல்பாட்டாளர் ஈ) கால் நடை பராமரிப்பவர்

15) ஒரு நிறுமம் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம் பற்றிய அறிக்கையை ........... நாள்களுக்குள் நிறுமப் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.
அ) 14 நாள்கள் ஆ) 21 நாள்கள் இ) 30 நாள்கள் ஈ) 60 நாள்கள்

16) இயக்குநர்கள் நிறுமத்தின் பணத்திற்கு ............ ஆகிறார்கள்.
அ) வங்கியாளர் ஆ) பங்குதாரர்கள்
இ) முகவர் ஈ) பொறுப்பாண்மையாளர்கள்

17) ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்ற ........ சதவிகித பங்குநர்கள் சாதகமாக வாக்களிக்க வேண்டும்.
அ) அனைத்து ஆ) 90% குறையாமல் இ) 75% குறையாமல் ஈ) 50%மேல்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

18) தவறான சொற்றொடரைக் கண்டுபிடி
அ) இயக்குநர்கள் நிறுமத்தின் முகவர்கள்
ஆ) இயக்குநர்கள் நிறுமத்தின் கடனீந்தோர்
இ) இயக்கநர்கள் நிறுமத்தின் பொறுப்பாண்மையர்
ஈ) இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகாரிகள்

19) அனைத்து இந்திய அரசாங்கங்களும் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய இந்திய பொருளாதாரத்தை நவீன மயமாக்க .......... முன் முயற்சி தொடங்கப்பட்டது.
அ) ஸ்டாண்ட் அப் இந்தியா
ஆ) ஸ்டாட்டப் இந்தியா
இ) டிஜிட்டல்இந்தியா
ஈ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

20) நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு ............. உதவுகிறது.
அ) நிதிகளை திரட்ட
ஆ) பணியாட்களை தேர்வு செய்ய
இ) விற்பனையை அதிகரிக்க
ஈ) நிதித் தேவையை குறைக்க

## பிரிவு - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 30 கட்டாய வினா) 7×2=14**

21) திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் பாரம்பரிய பழமொழி என்ன?
22) பரஸ்பர நிதி என்றால் என்ன?
23) புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவையான ஆவணங்களைக் கூறுக.
24) ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
25) பாதுகாப்பு உரிமை பற்றி நீவிர் புரிந்து கொண்டது என்ன?
26) VUCA விரிவாக்கம் தருக.
27) சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.
28) தொழில் முனைவோரின் மேலாண்மைப் பணிகளை கூறுக.
29) ஊக்கப் பங்குகள் என்றால் என்ன?
30) 'நிறும செயலருக்கும் நிறுமத்திற்கும் முதலாளி - தொழிலாளி என்ற உறவு நிலவுகிறது'-ஆராய்க

## பிரிவு - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 40 கட்டாய வினா) 7×3=21**

31) மோலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.
32) ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கும் நிறுமங்களை பற்றி விளக்குக.
33) அடைவுச் சோதனை குறித்து நீவிர் அறிவது யாது?
34) சந்தையில் என்னென்ன பொருட்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும்.
35) தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.
36) புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகளை எழுதுக.
37) 'மேலெழுதுதல்' வரையறு.
38) காலம் கடத்தும் பழமை வாத தொழில்முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக.
39) எப்பொழுது மாற்று இயக்குநரை நியமிக்கலாம்.
40) பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் பற்றி நீ அறிவது யாது?

## பிரிவு - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7×5=35**

41) அ) நவீன மோலண்மைக் கோட்பாடுகளை விவரி. **(அல்லது)**
ஆ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்க.

42) அ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. **(அல்லது)**
ஆ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக.

43) அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.

44) அ) சரக்கு விற்பனைச் சட்டத்தில் சரக்கினை வகைப்படுத்திக் காட்டுக. **(அல்லது)**
ஆ) கடன் பத்திரங்களின் வகைகள் யாவை?

45) அ) திருமதி இராணி ஒரு தொழில்முனைவோர். அவர் எதிர்கொள்ளும் சவால்களை விவரி. **(அல்லது)**
ஆ) இயக்குநரின் தகுதிகள் பற்றிக் கூறுக.

46) அ) காசோலையின் இயல்புகளைக் கூறி விளக்குக. **(அல்லது)**
ஆ) பலவகையான திறந்த மற்றும் இரகசிய வகையில் செய்யப்படும் வாக்கெடுப்பு முறைகளை விளக்குக.

47) அ) பணிசார் தொழில்முனைவோரின் தன்மைகளை விவரி. **(அல்லது)**
ஆ) பணிவழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

------

www.Padasalai.Net